அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6
மேல்நிலை–முதலாம் ஆண்டு பொதுத் தேர்வு மார்ச்–2025
உயிரி –தாவரவியல் – விடைக்குறிப்புகள்

(மொத்த மதிப்பெண் –35)

குறிப்பு :

1. நீலம் அல்லது கருப்பு மையினால் எழுதப்பட்டுள்ள விடைகள் மட்டுமே மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.
2. குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதப்பட்டிருக்க வேண்டும்.

## பிரிவு–1

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் (8 x1=8)

| வினா எண் | வகை A | | வினா எண் | வகை B | | மதிப்பெண் |
|---|---|---|---|---|---|---|
| 1. | இ. | பெடிலேந்தஸ் | 1. | அ. | ஊநீர்சார் வகைப்பாடு | 1 |
| 2. | ஆ. | குக்கர்பிட்டேசி | 2. | அ. | (1)-(iii),(2)-(i),(3)-(ii),(4)-(iv) | 1 |
| 3. | இ. | B | 3. | அ. | கூற்று I தவறானது ஆனால் கூற்று II சரியானது | 1 |
| 4. | அ. | 0.7 | 4. | இ. | B | 1 |
| 5. | அ. | ஊநீர்சார் வகைப்பாடு | 5. | ஆ. | குக்கர்பிட்டேசி | 1 |
| 6. | அ. | கூற்று I தவறானது ஆனால் கூற்று II சரியானது | 6. | ஈ. | பிரையோஃபைட்கள் | 1 |
| 7. | அ. | (1)-(iii),(2)-(i),(3)-(ii),(4)-(iv) | 7. | இ. | பெடிலேந்தஸ் | 1 |
| 8. | ஈ. | பிரையோஃபைட்கள் | 8. | அ. | 0.7 | 1 |

## பிரிவு–2

ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும் (4x2=8)

| வினா எண் | விடை | | மதிப்பெண் |
|---|---|---|---|
| 9. | 1. சையாத்தியம><br>2. ஹைபந்தோடியம்<br>3. சீனாந்தியம் (ஏதேனும் இரண்டு) | | 2 |
| 10. | நியூக்ளியோசைடு | நியூக்ளியோடைடு | 2 |
| | ஒருகாரம் சர்க்கரையுடன் இணைந்து காணப்படுகிறது. | நியூக்ளியோசைடு மற்றும் பாஸ்பாரிக் அமிலம் இணைந்து காணப்படுகிறது. | |

| வினா எண் | விடை | மதிப்பெண் |
|---|---|---|
| 11 | **டைலோஸ்கள்**<br>• பல இரு விதையிலை தாவரங்களில் சைலக்குழாய்களின் உள் வெளிப்பகுதி, அருகாமையிலுள்ள பாரன்கைமா செல்களிலிருந்து பல பலூன் போன்ற உள்வளரிகளால் அடைக்கப்படும். இந்த பலூன் போன்ற அமைப்பு டைலோஸ்கள் என்று பெயர் ஆகும். | 2 |
| 12. | 1. இலைத்துளை நீராவிப்போக்கு<br>2. பட்டைத்துளை நீராவிப்போக்கு<br>3. கியூட்டிகிள் நீராவிப்போக்கு | 2 |
| 13. | • வேரானது ஊட்டச்சத்து திரவத்திற்கு மேலே காற்றில் மிதந்தபடி இருக்குமாறு தாரவங்கள் பொருத்தப்பட்டிருக்கும்.<br>• இத்துடன் ஊட்டச்சத்து திரவம் சுழலும் மோட்டாரின் உதவியோடு வேர்கள் மீது தெளிக்கப்படுகிறது. | 2 |
| 14. | • கிளைக்காலைசிஸ் சுழற்சியில் 2–பாஸ்போகிளிசரேட் ஒரு நீர் மூலக்கூறினை இழந்து ஈனோலேஸ் நொதியினால் பாஸ்போஈனால் பைருவேட்டாக மாறுகிறது.<br>• இதில் ஈனால் தொகுதி உருவாகுவதால் இந்நிகழ்ச்சி ஈனோலேசன் எனப்படுகிறது.<br>(அல்லது)<br>2–ஃபாஸ்போ கிளிசரேட்<br>↓ ஈனோலேஸ் ($2H_2O$ ←)<br>ஃபாஸ்போஈனால்பைருவேட் | 2 |

**பிரிவு–3**

**ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும் (3x3=9)**

**(வினா எண் –19 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்)**

| வினா எண் | விடை | மதிப்பெண் |
|---|---|---|
| 15. | **பிளக்டோஸ்டீல்**<br>சைலமும், ஃபுளோயமும் தட்டுகள் போன்று மாறி மாறி அமைந்திருக்கும் முறைக்கு பிளக்டோஸ்டீல் ஆகும்.<br>**எ.கா.லைக்கோபோடியம் கிளாவேட்டம்** | 2<br><br><br>1 |

<table>
<tr><th>வினா எண்</th><th colspan="2">விடை</th><th>மதிப்பெண்</th></tr>
<tr><td>16.</td><td colspan="2">குடுவைத் தாவரம்<br><br>1. நெப்பந்தஸ் மற்றும் சர்ரசினியா தாவரத்திலும் இலையானது குடுவை வடிவத்தில் மாறுபாடு அடைந்துள்ளது.<br>2. இலையின் அடிப்பகுதியானது (இலைக்காம்பு) இலைப்பரப்பாகவும், மைய நரம்பானது சுருள் கம்பி போன்று பற்று கம்பியாகவும் மாறியுள்ளது.<br>3. இலையின் மேற்பரப்பானது குடுவையாக மாறியுள்ளது.<br>4. இலையின் நுனியானது குடுவையை மூடும் மூடியாக உருமாற்றம் அடைந்துள்ளது. (ஏதேனும் 3 மட்டும்)</td><td>3</td></tr>
<tr><td rowspan="4">17.</td><td>விலங்குசெல் சைட்டோகைனசிஸ்</td><td>தாவரசெல் சைட்டோகைனசிஸ்</td><td></td></tr>
<tr><td>1.பிளாஸ்மா சவ்வு சுருங்குவதால் இது நடைபெறுகிறது.</td><td>1.டீலோபேஸ் நிலையில் சைட்டோபிளாசம் பிரியதொடங்குகிறது</td><td rowspan="3">3</td></tr>
<tr><td>2.சுருங்கு வளையம் ஆக்டின் (ம) மையோசின் சேர்ந்த நுண்யிழைகளால் ஆனது.</td><td>2.பிராக்மோபிளஸ்ட்டுகளில் நுண்யிழைகள் ஆக்டின் இழைகள், கோல்கை உறுப்புகளிலிருந்து தோன்றும் வெசிக்கிள்கள் எண்டோபிளாச வலை காணப்படுகிறது.</td></tr>
<tr><td>3.இந்த இழைகள் உள்நோக்கி சுருங்குவதால் விசை ஒன்று தோன்றி சைட்டோபிளாசம் இரு சம அளவில் பிரிக்கப்படுகிறது</td><td>3.செல் தட்டு மையப்பகுதியில் துவங்கி வெளிநோக்கி நகர்ந்து செல்சுவரை அடைகிறது.</td></tr>
<tr><td>18.</td><td colspan="2"><u>திறந்தவாஸ்குலார் கற்றை</u><br><br></td><td>படம்– 2<br>பாகம்– 1</td></tr>
<tr><td>19.</td><td colspan="2"><u>திட்டமிடப்பட்ட செல் இறப்பு : (PCD)</u><br>முழுத்தாவரமோ அல்லது அதன் பகுதிகளோ தொடர்ச்சியாக மூப்படைதலின் மூலம் இறப்பதை திட்டமிடப்பட்ட செல் இறப்பு என்கிறோம். இது தனிசெல் இறப்பு எனவும் அழைக்கப்படுகிறது.</td><td>3</td></tr>
</table>

## பிரிவு–4

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் (2x5=10)**

**20. அ.** **கிராம் நேர், கிராம் எதிர் பாக்டீரியங்களுக்கு இடையே உள்ள வேறுபாடு** — 5 (ஏதேனும் 5 மட்டும்)

| வ. எண் | பண்புகள் | கிராம் நேர் பாக்டீரியங்கள் | கிராம் எதிர் பாக்டீரியங்கள் |
|---|---|---|---|
| 1. | செல்சுவர் | 0.015μm -0.02 μm அளவுடன் ஒரடுக்கால் தடித்துக் காணப்படும். | 0.015μm -0.02 μm அளவுடன் மெல்லிய பல அடுக்குகளால் ஆனது |
| 2. | செல் சுவரின் உறுதித்தன்மை | பெப்டிமோகிளைகான் காணப்படுவதால் செல் சுவர் மிகவும் உறுதியானது. | லிப்போபுரதம், பாலிசாக்கரைட் கலவையால் ஆனுதால் செல் சுவர் நெகிழ்வுத் (Elastic) தன்மைக் கொண்டது |
| 3 | செல் சுவரின் வேதித்தன்மை | பெப்டிமோகிளைகான் 80%, பாலிசாக்கரைட்கள் 20% டெக்காயிக் அமிலம் ஆகியவற்றைப் பெற்றுள்ளது. | 3–12% பெப்டிடோகிளைகான்கள், பாலிசாக்கரைட்கள், லிப்போபுரதங்களால் ஆனது. டெக்காயிக் அமிலம் காணப்படுவதில்லை |
| 4. | வெளிப்புறச் சவ்வு | காணப்படுவதில்லை | காணப்படுவதில்லை |
| 5. | பெரிபிளாஸ இடைவெளி | காணப்படுவதில்லை | காணப்படுவதில்லை |
| 6. | பெனிசிலினால் பாதிக்கும் தன்மை | அதிக அளவில் பாதிக்கப்படுகிறது | குறைந்த அளவில் பாதிக்கப்படுகிறது |
| 7. | ஊட்டத் தேவைகள் | மிக சிக்கலான ஊட்டமுறை உடையது | மிக எளிய ஊட்டமுறை உடையது |
| 8. | கசையிழையின் தன்மை | இரண்டு வளையங்களால் ஆன அடித்திரள் (basal body rings) உறுப்பு கொண்டது | நான்கு வளையங்களால் ஆன அடித்திரள் உறுப்பு கொண்டது. |
| 9. | கொழுப்பு மற்றும் லிப்போப்புரத்தின் அளவு (Lipoprotein) | குறைந்த அளவில் காணப்படும். | அதிக அளவில் காணப்படும். |
| 10. | லிப்போ–பாலிசாக்கரைட்கள் (Lipo-polysaccharides) | காணப்படுவதில்லை. | காணப்படுகிறது. |

**(அல்லது)**

**20. ஆ.** ஃபேபேசி குடும்பத்தின் ஏதேனும் ஐந்து தாவரங்களின் இருசொற்பெயர்கள் மற்றும் அதன் பொருளாதார முக்கியத்துவம். — 5

**21. அ** **பசுங்கணிகத்தின் அமைப்பு** — 5

விளக்கம் – 2 மதிப்பெண்கள்

படம் – 2 மதிப்பெண்கள்

பாகம் – 1 மதிப்பெண்

**(அல்லது)**

**21. ஆ** **$C_4$ சுழற்சி** — 5

விளக்கம்

(அல்லது)

வரைபடம்